## முதலாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஏழு - __________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. வாழை, கன்றை __________
   அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது
2. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் __________
   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை
3. ஒலியின் வரிவடிவம் __________
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) பாட்டு
4. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை __________
   அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள் இ) சுடப்பட்ட பழங்கள்
5. வானில் __________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
   அ) அகில் ஆ) முகில் இ) துகில்
6. __________ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.
   அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன் இ) பொறாமை உள்ளவன்
7. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது __________
   அ) கோலிக்குண்டு ஆ) பச்சைக்காய் இ) செங்கய்
8. பேச்சுமொழியை __________ வழக்கு என்றும் கூறுவர்.
   அ) இலக்கிய ஆ) உலக இ) மொழி
9. வாய்மை எனப்படுவது __________
   அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
   இ) பேசுதல்
10. 'வான் + ஒலி' - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________
   அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி

**II. நயம் அறிக.** 2 × 2 = 4

11. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
12. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

**III. சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக. 4 × 1 = 4**

13. அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்

ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்

இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்

ஈ) பொருள்களைச் சேர்த்தல்

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 × 2 = 10**

14. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

15. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.

16. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

17. வாழும் நெறி யாது?

18. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

19. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?

**V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 × 3 = 9**

20. பாடப்பகுதியில் இடம்பெற்ற நாடகத்தைக் கட்டுரையாக எழுதி அதன் வழி நீ அறிந்த நீதியைக் கூறுக.

21. ‘எங்கள் தமிழ்’ பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

22. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

23. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**VI. மனப்பாடப்பகுதி. 4 + 2 = 6**

24. “அருள்நெறி” எனத் தொடங்கும் ‘எங்கள் தமிழ்’ மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

25. “அரசு” என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**VII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு விடை எழுதுக. 7 × 1 = 7**

26. அ) ____________ நெஞ்சம்

ஆ) நோய் ____________

(இணைச் சொற்களை எழுதுக.)

27. அ) மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. ____________

ஆ) பேச்சுமொழி சிறப்பாக அமைய குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். ____________

(சரியா, தவறா என எழுதுக.)

28. அ) பசு, விடு, ஆறு, கரு – ____________

ஆ) அரசு, எய்து, மூழ்கு, மார்பு – ____________

இ) பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு – ____________

(பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.)